**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**
**முன்னிலை: திரு.பா.ஐயப்பன், பி.எ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ), முதுகுளத்தூர்.**

**2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் நாள் புதன்கிழமை**

**சுருக்குப்பட்டிகை வழக்கு எண்.207/2023**

**CNR.No.TNRM08-005985-2023**

அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர்,
முதுகுளத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்.99/2023 -- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

இருளாண்டி, வயது 48/2023,
த/பெ.ராமசாமி,
யாதவர் தெரு,
புளியங்குடி. -- எதிரி

| | | |
|---|---|---|
| | **<u>வழக்கு சுருக்கம்</u>** | |
| 1. | குற்ற நிகழ்வு நாள் | 24.05.2023 |
| 2. | தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 24.05.2023 |
| 3. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இல்லை |
| 4. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.08.2023 |
| 5. | கு.வி.மு.ச. பிரிவு 251-ன் கீழ் குற்றம் குறித்த சாராம்சம் வினவி கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.09.2023 |
| 6. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | - |
| 7. | சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **Date of Chief** / **Date of Cross**<br>PW-1 : 06.11.2024 / 06.11.2024<br>PW-2 : 06.11.2024 / 06.11.2024<br>PW-3 : 06.11.2024 / 06.11.2024<br>PW-4 : 26.06.2025 / 26.06.2025<br>PW-5 : 26.06.2025 / 26.06.2025 |

| | | |
|---|---|---|
| 8. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 18.07.2025 |
| 9. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | இல்லை |
| 10. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 24.08.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.07.2025ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அழகர்சாமி, M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**இவ்வழக்கானது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323 மற்றும் 506(1)–ன் கீழ் முதுகுளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.99/2023–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது.**

### அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :

இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரர் மருதுபாண்டி என்பவர் 24.05.2023ம் தேதி மாலை சுமார் 03.50 மணிக்கு புகார்தாரரின் ஊரைச்சேர்ந்த எதிரி இருளாண்டிக்கும், முருகேசன் மகன் கண்ணன் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு எதிரியின் மீது புகார் கொடுப்பதற்காக முதுகுளத்தூர் காவல்நிலையத்திற்கு கண்ணன் என்பவரை அழைத்து வந்துள்ளார். அப்போது அசா.1 முதுகுளத்தூர் தங்கம் டுவீலர் ஓர்க்ஷாப் முன்பு நின்றபோது எதிரி அசா.1யை பார்த்து டே தேவிடியா பயலே நீ என்ன பெரிய ஆளாடா என்று அசிங்கமாக பேசி அசா.1ன் மூக்கில் அவரது கையால் குத்தி

இரத்த காயத்தை ஏற்படுத்தி, இடது முழங்கைக்கும் கீழ் கை நகத்தால் கீறியும், பின் பக்க முதுகில் கையால் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அசா.1 வலி தாங்காமல் கத்தவும் அருகில் இருந்த கண்ணன் ஓடி வந்து எதிரியை சத்தம்போட்டு சண்டையை விலக்கிவிட்டுள்ளார். அதோடு எதிரி அங்கிருந்து செல்லும்போது அசா.1யை பார்த்து டே தேவிடியா பயலே இன்னைக்கு தப்பித்து விட்டாய் என்று நினைக்காதே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்ததாக இதச பிரிவுகள் 294(b), 323 மற்றும் 506(1)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் படி குற்ற இறுதி அறிக்கை அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கு.வி.மு.ச பிரிவு 190(1)(b)ன் படி கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204ன் படி அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி இலவசமாக நகல்கள் வழங்கப்பட்டு இது அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டு வனையாமல் மாறாக குற்றம் குறித்த சாராம்சம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 251ன் படி எதிரியிடம் வினவி கேட்டப்போது எதிரி மறுத்ததால் கு.வி.மு.ச.பிரிவு 254–ன் படி அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**3)** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அசா.ஆ.6 வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் படி உள்ள வழக்கு</u>

**4) அ.சா–1 திரு.முருதுபாண்டி தன்னுடைய சாட்சியத்தில்** கடந்த 24.05.2023ம் தேதி மதியம் 03.30 மணியளவில் அசா.1ம் அவரது

மருமகனாக கண்ணன் என்பவரும் மனு கொடுப்பதற்காக முதுகுளத்தூர் காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்கள். அசா.1 காவல் நிலையத்திற்கு வெளியில் நின்று கொண்டிருந்துள்ளார். எதிரி இருளாண்டி இருசக்கர வாகனத்தில் வந்துள்ளார். காவல் நிலைத்திற்கு சென்று விட்டு தங்கம் ஓர்க் ஷாப்பில் அசா.1 நிற்பதை பார்த்து அசா.1 னிடம் வந்து உன்னை யார் இங்கு வர சொன்னார் என்று கேட்டுள்ளார். யாரடா உன்னை வரசொன்னார் தேவுடியா மகனே என்று சொல்லி அசா.1 ன் சட்டையை பிடித்துக்கொண்டு முகத்தில் அடித்துள்ளார். எதை வைத்து அடித்தார் என்று அசா.1 க்கு ஞாபகம் இல்லை. அப்போது அசா.1 க்கு மூக்கில் இருந்து ரத்தம் வந்துள்ளது. அதன் பிறகு சிகிச்சைக்காக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார்கள். அசா.1 முகுதுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது முழு மயக்கத்தில்தான் இருந்துள்ளார். அசா.1 யை எதிரி அடித்தவுடன் அசா.1 மயக்கமாகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். **(புகார் மனு அ.சா.ஆ.1)**

**5) அ.சா–2 திரு.கண்ணன் தன்னுடைய சாட்சியத்தில்** கோகுலகண்ணன் அசா.2 யை அடித்ததால் முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் 24.05.2023 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் மனு கொடுக்க சென்றுள்ளார். அசா.2 னுடன் அசா.2 ன் மாமா அ.சா.1 மருதுபாண்டி வந்துள்ளார். அசா.2 ன் மாமா அ.சா.1 காவல் நிலையத்திற்கு வெளியில் நின்றுள்ளார். அசா.2 ன் மாமா அ.சா.1, எதிரி இருளாண்டி அவரை அடித்துவிட்டதாக சொல்லியுள்ளார். அசா.2 ன் மாமா அ.சா.1 க்கு முக்கில் அடிபட்டு ரத்தம் வந்து மயங்கியுள்ளார். பின்பு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அ.சா.1 யை சேர்த்துள்ளார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சேர்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**6) அ.சா–3 திரு.ஆறுமுகம் தன்னுடைய சாட்சியத்தில்** அசா.3 னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் எதுவும் அவருடையது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7) அ.சா–4 திருமதி.உமாசங்கரி (அரசு மருத்துவர்) தன்னுடைய சாட்சியத்தில்** அசா.4 முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 24.05.2023 ம் தேதி மாலை 04.35 மணியளவில் 31 வயது மதிக்கத்தக்க மருதுபாண்டி என்பவரை அவரின் சகோதரியின் மகன் கண்ணன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்துள்ளார். அசா.4 அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்துள்ளார். அசா.1 க்கு மூக்கில் இருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்துள்ளது. வேறு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அசா.1 யை விசாரித்தபோது அவரை தெரிந்த நபர் ஒருவர் 24.05.2023 ம் தேதி மாலை 03.50 மணியளவில் முதுகுளத்தூர் தங்கம் வெர்க்ஷாப் அருகில் வைத்து தாக்கியதாக கூறியுள்ளார். மேலும் அசா.1 தனக்கு முதுகு வலி, கழுத்து வலி இருப்பதாக கூறியுள்ளார். அதனால் அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு ECG எடுத்து பார்த்துள்ளார். ECG எடுத்து பார்த்ததில் அவருக்கு இதயம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இருப்பதாக தெரியவந்ததால் அதற்கு தேவையான மருந்து மாத்திரைகளை அடிளத்து இருதைய மருத்துவரின் கருத்தை கேட்க பரிந்துரை செய்துள்ளார். அவருக்கு மூக்கில் இருந்து ரத்தம் கசிந்ததால் தலை பகுதியை CT Scan எடுக்கவும் பரிந்துரை செய்துள்ளார். மேற்படி நபரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளார். மேற்படி நபருக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் சிகிச்சை அளித்து மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்து வழங்கியதால் அசா.4 ம் அசா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று அளித்ததாக சாட்சியம்

அளித்துள்ளார். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.2 மற்றும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட மருத்துவச்சான்றிதழ் அ.சா.ஆ.3)**

**8) அ.சா−5 திருமதி.சத்யா (சார்பு ஆய்வாளர்) தன்னுடைய சாட்சியத்தில்** கடந்த 24.05.2023ம் தேதி அசா.5 முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புளியங்குடி கிராமத்தை சேர்ந்த அசா.1 மருதுபாண்டி, த.பெ.மாயழகு என்பவரை விசாரித்து அசா.1 கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளார். பின்பு 19.00 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.99/2023 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i)−ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**). பிறகு வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 19.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் லெட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6).** அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளான மருதுபாண்டி, கண்ணன், லெட்சுமணன், ஆறுமுகம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ இட சாட்சிகளின் விசாரணையிலும் அசா.5ன் தனிப்பட்ட விசாரணையிலும் எதிரி குற்ற சம்பவத்தில் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரியை தேடிவந்த நிலையில் 02.08.2023ம் தேதி முதுகுளத்தூர் காவல் நிலையம் முன்பு வைத்து காலை 09.55 மணிக்கு காரணம் கூறி எதிரியை கைது செய்து 10.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு

இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர்கள் திருமதி.வள்ளிபிரியா மற்றும் திருமதி.உமாசங்கரி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார். அவர்கள் அசா.1 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்துள்ளார்கள். வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் புலன் விசாரணையை 04.08.2023 ம் தேதி முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**9)** அரசு தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களில் எதிரிக்கு எதிராக தோன்றும் விபரங்கள் குறித்து எதிரியிடம் குற்றவியல் விசாரணைமுறை சட்டம் பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது அவை பொய் சாட்சி என்று எதிரி மறுத்துவிட்டார்.

**10)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 323 மற்றும் 506(i)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

**<u>பரிசீலனையும், தீர்வும்:</u>**

**11)** அசா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 24.05.2023 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு தானும் தனது மருமகனும் முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வரும்போது எதிரி தனது சட்டையை பிடித்துக்கொண்டு முகத்தில் அடித்ததாகவும், அப்போது தனக்கு

மூக்கில் ரத்தம் வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் தான் சிகிச்சைக்காக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரி தன்னை எதைவைத்து அடித்தார் என்று தனக்கு ஞாபகம் இல்லை என சாட்சியம் அளித்துள்ளார். அசா.4 சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 24.05.2023 ம் தேதி மாலை 04.35 மணிக்கு அசா.1 யை அவரது மருமகன் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும், அசா.1 ன் மூக்கில் ரத்தம் கசிந்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மேற்படி நபரை பரிசோதனை செய்து அவரை மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்ததாகவும், அசா.1 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேற்படி அசா.1 மற்றும் அசா.4 ன் சாட்சியத்தை ஒருசேர பரிசீலனை செய்து பார்த்ததில் அசா.1 க்கு மூக்கில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்ததும் மேற்படி காயம் சாதாரண காயம் என்பதும் அசா.ஆ.2 மூலம் தெரிய வருகிறது. மேற்படி காயம் எதிரியால் ஏற்படுத்தப்பட்டதா என்பது குறித்து பரிசீலனை செய்து பார்க்கும்போது காயம்பட்ட நபர் தான் தனக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்தும், மேற்படி காயம் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்தும் சொல்லமுடியும். அந்த அடிப்படையில் புகார்தாரர் தன்னை எதிரி தான் முகத்தில் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரி எதைவைத்து அடித்தார் என்று சொல்லாததால் அசா.1 க்கு காயம் எதிரியால் ஏற்படுத்தப்படவில்லை என கருதமுடியாது. மேலும், சம்பவ சமயத்தில் அசா.1 மது அருந்தியுள்ளார் என்று அசா.4 சாட்சியம் அளித்துள்ளதால் எதிரியால் அசா.1 க்கு காயம் ஏற்படுத்தப்படவில்லை என கருதமுடியாது. ஏனெனில் சம்பவ சமயத்தில் அசா.1 மது அருந்தியிருந்தாலும் எதிரியால் காயம்

ஏற்படுத்தப்படவில்லை என்பது குறித்து நிரூபிக்க எதிரி தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**13)** அசா.2 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது அவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சி கேள்விநிலை சாட்சி ஆகும். இந்திய சாட்சிய சட்டத்தின் சிறப்பு கோட்பாட்டின்படி கேள்விநிலை சாட்சியம் ஏற்க்கத்தக்கதில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** அசா.3 இவ்வழக்கில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேற்படி இவ்வழக்கில் முதல்தகவல் அறிக்கை 7 நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளதால் அரசு தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக கருதமுடியாது. அதன்படி இவ்வழக்கில் அசா.1 யை எதிரி பொது இடத்தில் வைத்து அருவருக்கதக்க வகையில் பேசினார் என்ற சங்கதியை பொறுத்தவரையில் மேற்படி குற்றச்சாட்சி நிரூபிக்க தக்க சாட்சிய சான்றாவணம் அரசு தரப்பில் முன்நிறுத்தப்படவில்லை. எனவே எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** மேலும், இவ்வழக்கில் எதிரி புகார்தாரரை குற்றமுறுமிரட்டல் விடுத்ததால் தனக்கு உடனடி உயிர்பயம் ஏற்பட்டது குறித்து பொருண்மையை அரசு தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணம் மூலம் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. பொதுவாக வழக்கில் சாட்சிகளின் எண்ணிக்கையை விட சாட்சியத்தின் தன்மையே சிறந்தது என்பதே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134 ன் படி இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. அசா.1, அசா.4 மற்றும் அசா.ஆ 2 ஆவணத்தின்படி எதிரியால் தான் அசா.1 க்கு காயம் விளைக்கப்பட்டது என்ற பொருண்மை நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** எனவே, எதிரி மீது இதச பிரிவு 323–ன் படியான குற்றத்திற்கு குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

**<u>தீர்வு:</u>**

**17) (i)** முடிவாக மேற்கண்ட ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் மற்றும் விவாதிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அரசுத்தரப்பு வழக்கில் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)–ன் படியான குற்றத்தை போதுமான மற்றும் தெளிவான சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)–ன் கீழ் படியான குற்றச்சாட்டிலிருந்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்கிறது.

**(ii)** எதிரிக்கு இ.த.ச.பிரிவு 323–ன் கீழான குற்றத்திற்கு **ரூ. 1000/–** அபராதம் விதித்தும் அபராதத்தை கட்ட தவறும் பட்சத்தில் **2 வாரம்** மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 255(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**18)** இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதுமில்லை.

**19)** எதிரி எழுதிக்கொடுத்த பிணைபத்திரம் இத்துடன் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 23ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) பா.ஐயப்பன்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

1) அ.சா.1 – திரு.மருதுபாண்டி

2) அ.சா.2 – திரு.கண்ணன்

3) அ.சா.3 – திரு.ஆறுமுகம்

4) அ.சா.4 – திருமதி.உமாசங்கரி (அரசு மருத்துவர்)

5) அ.சா.5 – திருமதி.சத்யா (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

1) அ.சா.ஆ. 1 – புகார் மனு

2) அ.சா.ஆ. 2 – விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழ்

3) அ.சா.ஆ. 3 – இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட மருத்துவச்சான்றிதழ்

4) அ.சா.ஆ. 4 – முதல் தகவல் அறிக்கை

5) அ.சா.ஆ. 5 – பார்வை மகசர்

6) அ.சா.ஆ. 6 – மாதிரி வரைபடம்

**அரசு தரப்பு சான்றுபொருள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்று பொருட்கள் மற்றும்**
**சான்றாவணங்கள்** :– இல்லை

**குறிப்பு :–**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒப்பம்)பா.ஐயப்பன்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.